செ.வெ.எண்:  26                                                              நாள்:  12.09.2021

**நாகப்பட்டினம் மாவட்டத்தில் நடைபெற்ற கொரோனா மாபெரும் தடுப்பூசி முகாமினை மாவட்ட கண்காணிப்பு அலுவலா் திரு.வி.அருண்ராய் இ.ஆ.ப., அவா்கள், திரு.சந்தீப்நந்தூரி இ.ஆ.ப.,அவா்கள் தலைமையில் மற்றும் மாவட்ட ஆட்சித்தலைவா் டாக்டா்.அ.அருண்தம்புராஜ் இ.ஆ.ப., அவா்கள் முன்னிலையில் இன்று (12.09.2021) பாா்வையிட்டாா்கள்.**

நாகப்பட்டினம் மாவட்டத்தில் நடைபெற்ற தெற்கு பால்பண்ணைச்சேரி நகராட்சி தொடக்க பள்ளி, சவேரியாா் கோவில் தெரு  கட்டிட உரிமையாளா் சங்கம், வேளாங்கண்ணி ஆா்ச் திருப்பயணிகள் தங்கும் இடத்தில் நடைபெற்ற கொரோனா மாபெரும் தடுப்பூசி முகாமினை மாவட்ட கண்காணிப்பு அலுவலா்கள் திரு.வி.அருண்ராய் இ.ஆ.ப., அவா்கள், திரு.சந்தீப்நந்தூரி இ.ஆ.ப., அவா்கள், தலைமையில் மாவட்ட ஆட்சித்தலைவா் டாக்டா்.அ.அருண்தம்புராஜ் இ.ஆ.ப., அவா்கள் முன்னிலையில் இன்று (12.09.2021)  பாா்வையிட்டாா்கள்.

மாண்புமிகு தமிழக முதல்வா் அவா்களின் உத்தரவின்படி தமிழகம் முழுவதும் கோவிட்-19 மாபெரும் தடுப்பூசி முகாம் காலை 07.00 மணி முதல் இரவு 07.00 மணி வரை நடைபெற்று வருகிறது. நடைபெற்றுவரும் முகாம்களை கண்காணிக்க கண்காணிப்பு குழுவும் அமைக்கப்பட்டுள்ளது. அதனைத் தொடா்ந்து நாகப்பட்டினம் மாவட்டத்தில் அரசு ஆரம்ப சுகாதார நிலையங்கள், ஊராட்சிகள், நகராட்சிகள் மற்றும் பேரூராட்சிகள், பள்ளிக் கல்லூரிகள் போன்ற இடங்களில் 325 கொரோனா தடுப்பூசி முகாம்கள் அமைக்கபட்டு சுமாா் 25000 மேற்பட்டவா்களுக்கு  தடுப்பூசி போட இலக்கு நிா்ணயிக்கப்பட்டுள்ளது.  ஏற்கனவே 51 சதவீத மக்கள் முதல் தவணை தடுப்பூசியினையும், 11 சதவீத மக்கள் இரண்டாம் தவணை தடுப்பூசியினையும் செலுத்தியுள்ளாா்கள்.  இந்த முகாம் மூலம் மீனவ பெருமக்கள், கா்ப்பிணி பெண்கள், பாலூட்டும் தாய்மாா்கள், மாற்றுதிறனாளிகள், நீரிழிவு நோய் மற்றும் இரத்தகொதிப்பு உள்ள அனைவரும் தவறாமல் தடுப்பூசி எடுத்துகொள்ள  அறிவுறுத்தப்படுகிறது.

இம்மாவட்டத்தை பொறுத்தவரை தற்போது கொரோனா தொற்று குறைந்துள்ளது. இருப்பினும் பொதுமக்களுக்கு போதுமான விழிப்புணா்வு

நிகழ்ச்சிகள் நடத்தி வருகிறோம். மேலும் பொதுமக்கள் அனைவரும் வெளியில் செல்லும்போது கட்டாயமாக முகக் கவசம் அணிய வேண்டும், கைகளை அடிக்கடி சுத்தம் செய்ய வேண்டும், சமூக இடைவெளியை பின்பற்ற வேண்டும். கொரோனா 3 ஆம் அலையிலிருந்து நம்மை காப்பதற்பான ஒரே ஆயுதம் அனைவரும் தவறாமல் தடுப்பூசி எடுத்துக்கொள்ள வேண்டும் என மாவட்ட ஆட்சித்தலைவர் டாக்டர்.அ.அருண்தம்புராஜ் இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்தார்கள்.

இந்நிகழ்ச்சியில் துணை இயக்குநர் சுகாதாரப்பணிகள் மரு.விஜயகுமார், நகராட்சி ஆணையர் திருமதி.ஸ்ரீதேவி, பேரூராட்சி செயல் அலுவலர்கள், மருத்துவர்கள், செவிலியர்கள் மற்றும் அரசு அலுவலர்கள் கலந்துகொண்டனர்.

**செய்தி வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், நாகப்பட்டினம்.**